**இரண்டாவது பெருநகர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், எழும்பூர் சென்னை 8**

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்- 170 /2024

அரசு தரப்பு சாட்சி. 1 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாஸ்கரன் | வட்டம் | |
| த/பெ | தர்மர் | சாதி | |
| வயது | 57/2024 | அழைத்தல் | |
| தொழில் | மருத்துவர் | மதம் | |
| விலாசம் | எண்.221, செக்டரியேட் காலனி, 9 வது தெரு, சென்னை-10 | | |

2024 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 25 ஆம் நாளன்று 1969 ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச்சட்டம் 44/1969)-இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்.

**அரசு தரப்பில் முதல் விசாரணை-**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் மருத்துவராக பணி செய்து வருகிறேன். எனது மனைவி பெயர் அனிதா. அவரும் மருத்துவராக பணி செய்து வருகிறார். எங்களுக்கு ஒரு மகன், ஒரு மகள் இருக்கிறார்கள். நான் வழக்கு சம்பவ சமயத்தில ் மேற்படி விலாசத்தில் வசித்து வந்தேன். அந்த சமயத்தில் எனது மனைவி அனிதா தூத்துக்குடியில் வேலை பார்த்து வந்தார். கடந்த 02.08.2019 அன்று வெள்ளிக்கிழமை எனது மனைவி அனிதா தூத்துகுடியில் இருந்து சென்னைக வந்திருந்தா. அன்று இரவு 8 மணியளவில் என்னிடம் வாக்குவாதத்தில் ஈடுப்பட்டு சாப்பாத்தி கட்டையில் என் முகத்தில் அடித்தார். எனக்கு வாயில் மேற்பகுதியில் வலது பக்கத்தில் உள்ள உடைந்து விழுந்துவிட்டது. உதட்டில் ரத்த காயம் ஏற்பட்டது. நான் உடனடியாக அரசு கீழ்பாக்கம் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். அன்றைய தினமே போலீசார் எழுத்து மூலமான புகார் பெற்று கொண்டார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் அசா.ஆ.1 ஆகும். பின்பு 06.08.2019 அன்று தான் எனக்கு சிஎஸ்ஆர் வழங்கினார்கள். அந்த சிஎஸ் ஆர் அசா.ஆ.2 ஆகும். பின்பு போலீசார் விசாரணை செய்து வழக்கு பதிவு செய்தார்கள். எனது மனைவி அனிதா எனது மகளை எனக்க தெரியாமல் மதம் மாற்றி வேறு மதத்தை சார்ந்தவருக்கு திருமணம் செய்து கொடுத்ததால் எங்களுக்கு பிரச்சினை ஏற்பட்டது. தற்போது என்னிடம் காட்டப்படும் புரி கட்டையால் தான் சம்பவதினதன்று என் மனைவி என்னை தாக்க பயன்படுத்தியது. அது பொ.சா.1 ஆகும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

நான் எனது மனைவிக்கு எதிராக விவாகரத்து கேட்டு மனு தாக்கல் செய்து அது நிலுவையில் இருந்து வருகிறது. நான் மேற்கண்ட மனுவை 14.10.2019 அன்று சென்னை குடும்பல நல நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். நான் மனுவை தாக்கல் செய்த போது எனது மனைவி தூத்துகுடியில் பணியில் இருந்தாா். இந்த சம்பவம் நடந்த இரண்டு வருடங்கள் கழித்து என் மனைவி தூத்துக்குடியில் என் மீது பொய் புகாா் கொடுத்தாா். அந்த வழக்களில் சென்னை கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது, உயா் நீதிமன்றம் அதற்கு தடை விதித்துள்ளது.

சாட்சியின் கையொப்பம்

2024 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 25 ஆம் நாளன்று 1969 ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச்சட்டம் 44/1969)-இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.